DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 18/2017 |
| Deposition of Witness for | : | P.W. |
| | : | D.W. |
| | : | R.W.1 |
| | : | Court. |
| Name | : | சஞ்சீவி குமார் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.07.2026

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதுரை வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் வட்டார போக்குவரத்து அலுவலர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன், அதற்கான அத்தாட்சி கடிதம் எடுத்து வந்துள்ளேன். அழைப்பாணையில் கேட்கப்பட்ட பிரபு என்பவரின் ஓட்டுநர் உரிமம் எக்ஸ்ட்ராக்ட் கொண்டுவந்துளேன். அது **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 25.03.2016 ல் ஏற்பட்ட சாலைவிபத்தின் போது TN 58 AC 7162 என்ற லாரி வாகனத்தை ஓட்டியவர் பிரபு த/பெ.முத்து ஆகும். இவருக்கு விபத்து ஏற்பட்ட காலத்தில் கனரக வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதற்கான அந்த ஆவணத்தை எடுத்து வந்துள்ளேன்.

**குறுக்கு விசாரணை:**

25.03.2016 ம் தேதியில் கனரக வாகனத்தின் விபத்திற்கான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை எங்களது அலுவலகத்திலிருந்து சமர்ப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். பிரபு என்பவர் கனரக வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதற்கு

அந்த காலகட்டத்தில் அபராதம் ஏதும் செலுத்தியுள்ளாரா என்றால் அந்த விபரம் எனக்குத் தெரியாது. விபத்து சமயத்தில் பிரபு கனரக வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் வைத்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் மணப்பாறை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு மேற்கொண்டதால், பிரபு அவர்வசம் உரிமத்திற்கான அனைத்து அவணங்களை ஒப்படைத்திருப்பார் என்றும், ஆனால் அது குறித்து எங்களுக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல, ஓட்டுநர் உரிமத்திற்காக எக்ஸ்ட்ராக்ட்டில் அனைத்து விபரங்களும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.